
111870

Q23:38.2119b
N58

111340

# செம்பியன்மாதேவித் தல வரலாறு



923:32.21416
N 58
111340

1

உ

# செம்பியன்மாதேவித் தல வரலாறு

Accn. No: 111340
No of Pages: 52

# செம்பியன்மாதேவித் தல வரலாறு

எழுதியவர் :

திரு. வை. சதாசிவ பண்டாரத்தார்

வெளியிடுவோர் :

ஸ்ரீ கயிலாசநாதசுவாமி தேவஸ்தானம்

செம்பியன்மாதேவி,

வடுக்கச்சேரி P.O.

முதற் பதிப்பு : 1958

N53

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111340
MADRAS

விலை ரூ. 0.25

தாரா அச்சகம், நாகப்பட்டினம்.

# பதிப்புரை

ஒவ்வொரு கோயிலுக்கும் அதன் புகழ் பாட, சிறப்புக் கூற ஓர் தல வரலாறு உண்டு. அக்குறைக் களைய எழுந்ததுதான் இச்சிறு வெளியீடு.

செம்பியன் மாதேவித் தல வரலாறு கற்றோராலும் மற்றோராலும், வரலாற்று ஆராய்ச்சியாளர்களாலும் படித்து வியந்து மகிழ வேண்டும் என்று நாங்கள் எண்ணினோம். எங்கள் எண்ணத்தை உருவாக்க தல வரலாறு எழுதி முடிக்க தக்கார் ஒருவரைத் தேடினோம். அகன்ற கல்வியும், ஆராய்ச்சித் திறனும் ஒருங்கே அமைந்த உயர் சைவத் திருவாளர் **T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள்** எங்கள் நினைவுக்கு வந்தார்கள். எங்கள் விழைவினைக்கூறி இசைவைக் கேட்டபோது அவர்கள் தயக்கமின்றி ஒப்புக் கொண்டு எண்ணியபடியே எழுதியுமுதவினார்கள். இத்தல வரலாறு எழுதும் பொறுப்பை திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்களிடம் கொடுத்த செய்தியை உணர்ந்த இம்மாநில அறநிலைய ஆணையர் அவர்கள் மிக மிக மகிழ்ந்ததையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

இது காறும் வெளிவந்துள்ள தல வரலாறுகள் பல ஆராய்ச்சியுரை யேதுமின்றி புராணத்தை அடிப்படையாகக் கொண்டு அப்படியே எழுதப்பட்டன.

அக்குறையை நீக்கவே அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளரும் ஆராய்ச்சிப் பேரறிஞருமாகிய திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் நுண்மாண் பொருள் மிக்க இவ்வரலாற்றை வரலாற்று அடிப்படையில் செந்தமிழ்ச் சுவை விஞ்சும்படி எழுதியுதவினார்கள்.

இத்தல வரலாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முதற் பகுதியில் கோயில் வரலாற்றையும், இரண்டாம் பகுதியில் கல்வெட்டுக்களாலறியப்படும் செய்திகளையும், மூன்றாம் பகுதியில் சோழப் பேரரசி செம்பியன் மாதேவியாரின் வரலாற்றையும் சுருக்கி, நெருக்கி கல்வெட்டு ஆராய்ச்சிக் குறிப்புகளின் துணை கொண்டு தம் அகன்று பரந்த அறிவால் திரு. பண்டாரத்தாரவர்கள் எழுதியிருப்பது மிகவும் புகழ்தற் குரியது; போற்றற் குரியது.

இந்நூல் இக் கோயிலின் வரலாற்றை மட்டும் குறிப்பதன்று; சோழர் காலத்து வரலாறு கூறும் கருவூலம். மழவர்கோன் பெற்றெடுத்த மாதரசி சோழ வளநாட்டின்பேரரசி சைவப்பிராட்டி செம்பியன்மாதேவியாரின் வரலாறு கூறும் காப்பியம். சிறந்த வரலாற்றுப் புகழ் கொண்ட இச் 'செம்பியன்மாதேவித் தல வரலாற்றை' எழுதியுதவிய ஆசிரியர் அவர்களுக்கு எழுமையும் மறவா நன்றி கடப்பாடுடையோம்.

'கல்கி' இதழில் முன்னாள் நிர்வாக அதிகாரி திரு. N. **கோவிந்தசாமி** அவர்களால் 'செம்பியன்மாதேவி' என்ற தலைப்பில் எழுதப் பெற்று வெளிவந்த கடிதத்தை



இந்நூலில் பிரசுரிக்க உரிமை தந்த **'கல்கி'** ஆசிரியரவர்கட்கும், துணையாசிரியர் திரு. **ஜெயமணி சுப்பிரமணியன்** அவர்களுக்கும், கடித ஆசிரியரவர்கட்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றி.

இப்பதிப்பினை செப்பமான முறையில் அழகு மிளிர அச்சியற்றித்தந்த நாகை தாரா அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி!

சிறந்த வரலாற்றுப் புகழ் கொண்ட செம்பியன் மாதேவித் தல வரலாற்றை நல்ல முறையில் பதிப்பித்து வெளியிட்டோம்—தமிழகம் இந்நூலை ஏற்றுப் போற்றும் என நம்புகிறோம்.

இங்ஙனம்,

S. **ரெங்கராமானுஜம்**, B. A.,
தலைவர், தர்மகர்த்தாக்கள் குழு.

T. **நாகராசன்**, B.Sc.,
நிர்வாக அதிகாரி.

V. **கோதண்டபாணி**.

P. **சுப்பிரமணியன்**
தர்மகர்த்தாக்கள்.

தற்போதைய தர்மகர்த்தாக்கள் :

1. **திரு. S. ரெங்கராமானுஜம், B.A.,**
நிலக் கிழார் – மூஞ்சுகுடி.
தலைவர் – தர்மகர்த்தாக்கள் குழு.

2. **,, V. கோதண்டபாணி,**
நிலக் கிழார் – ஓட்டத்தட்டை.


3. **,, P. சுப்பிரமணியம்,**
நிலக் கிழார் – மகிழி.

○

தற்போதைய நிர்வாக அதிகாரி :

**திரு. T. நாகராசன், பி. எஸ். சி.**





அம்பிகை ஸ்ரீ பெரியநாயகி

13—5—1959ல் நிகழ்ந்த
''மகா கும்பாபிஷேக'' நினைவு வெளியீடு.

நன்றி...

இத்தல வரலாற்றுக்கு மதிப்புரை வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் உயர்திரு. டி.எம். நாராயண சாமிப் பிள்ளை M. A., B. L., M. L. C. அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய காரைக்குடி உயர்திரு. சா. கணேசன் அவர்களுக்கும், புகைப்படம் எடுத்துதவிய மாயூரம் 'கெம்பு'வுக்கும் எங்கள் இதயங் கனிந்த நன்றி.

–பதிப்பகத்தார்.

# மதிப்புரை

T. M. நாராயணசாமி பிள்ளை, M.A., B.L.,
துணை வேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

செம்பியன் மாதேவி தலவரலாற்றைப் படித்து நான் மிக மகிழ்ந்தேன். இதன் ஆசிரியர் உயர்திரு டி. வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தமிழ் நாட்டின் வரலாறு பற்றிச் செய்துவரும் தொண்டு மிகவும் போற்றத் தக்கது.

இச் செம்பியன் மாதேவி வரலாறு ஒரு விதத்தில் சோழர்கள் நாட்டு மக்களுக்குப் பக்தி ஊட்டுவதற்குச் செய்துள்ள திருப்பணிகளை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. அதே சமயம் அக் காலச் சரித்திரத்தை நன்கு விளக்குகிறது. இந் நூலிலிருந்து செம்பியன் மாதேவியார் தமிழ் நாடு முழுதும் கி. பி. 941 முதல் கி. பி. 1001 வரை செய்திருக்கும் திருப்பணிகளை அறியலாம்.

இந்நூல் மூன்று பிரிவுகளை உடையது. முதல் பிரிவு ஊரின் அமைப்பு, கோயில் நிர்வாகம் முதலியவை பற்றியும், இரண்டாம் பிரிவு இக்கோயிலில் செதுக்கப்பட்டுள்ள கல் வெட்டுகளைப் பற்றியும், மூன்றும் பிரிவு செம்பியன் மாதேவியின் வரலாறு, அவ்வம்மையார் 60 ஆண்டுகள் செய்த கோயிற் றிருப்பணிகள் பற்றியும் கூறுகின்றன.

இத்துறையில் புதிதாக வெளி வந்துள்ள ஆராய்ச்சி நூல் இது. இதை இயற்றிய ஆசிரியரின் நுண்ணறிவு போற்றத்தக்கது. நடையும் எளியது. இந்த அரிய வரலாற்றைப் படித்து எல்லோரும் இன்புறுக.

# அணிந்துரை.

[காரைக்குடி சா. கணேசன்.]

இராசகேசரி கண்டராதித்தன் என்பவன் சோழப் பேரரசரில் ஒருவன். கி. பி. 953 முதல் 957 வரை சோழ மண்டலத்தை ஆண்டவன். கண்டராதித்த தேவர் என்றும், மும்முடிச் சோழ தேவர் என்றும் மக்கள் மிகுந்த அன்புடன் இவனை அழைப்பர். செந்தமிழ்ப் புலமையும், சிவஞானத் தெளிவும் உடையவன். தில்லைக் கூத்தன்பால் எல்லையிலாப் பக்தி பூண்டவன். சைவத் திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையில், திருவிசைப்பாவில் உள்ள 'கோயிற் பதிகம்' இவன் பாடியதாகும். தில்லைப் பெருமானிடம் இவனுக்குள்ள ஆராத காதலையும், அம்பலத்தாடிதன் அடிமலரைக் கூட வேண்டும் என்னும் தீராத ஏக்கத்தையும் அப் பதிகத்தை மேற்போக்காகப் பார்ப்பவர்களும் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

கண்டராதித்தனுக்கு இரு மனைவிமார்கள். முதல் மனைவி வீரநாரணி என்னும் பெயரினள். இளையவள் பெயர் செம்பியன் மாதேவி. கண்டர் ஆதித்தன் பட்டத்திற்கு வருமுன்னரே வீரநாரணி இறந்துவிட்டாள். எனவே செம்பியன் மாதேவி தான் பட்டத்து அரசியாக வீற்றிருந்திருக்கிறாள். கண்டர் ஆதித்தன் சுமார் நான்கு ஆண்டுகளே

அரியணையில் இருந்திருக்கிறான். அவன் காலமான பின்னர் சுமார் 45 ஆண்டுகள் செம்பியன் மாதேவி உயிர் வாழ்ந்திருக்கிறாள். தன் வாழ்நாள் எல்லாம் சிவனடி மறவாச் சிந்தையளாய், தெய்வத் திருப் பணியே செய்து சோழர் வரலாற்று ஏட்டிலே ஒப்பு உரைக்க ஒண்ணாதபடி நிலை பெற்று விளங்கு கிறாள். சிவப் பணிக்கே தன்னை அற்பணித்துக் கொண்டு பெரு வாழ்வு வாழ்ந்தமையால் இவள் மாதேவடிகள் என்று பாராட்டப் பெற்றிருக்கிறாள்.

தன் மாமனார் முதற் பராந்தக சோழன் 1, அவன் பின் தன் கணவன் கண்டர் ஆதித்த சோழன் 2, அவன் பின் தன் கொழுந்தன் அரிஞ்சய சோழன் 3, அவன் பின் மேற்படி கொழுந்தன் மகன் இரண்டாம் பராந்தகன் ஆகிய சுந்தர சோழன் 4, அவன் பின் தன் அருமை மகன் மதுராந்தகன் ஆன உத்தம சோழன் 5, அவன் பின் தன் கொழுந்தன் பேரன் அருள் மொழி வர்மன் ஆன இராசராச சோழன் 6, ஆகிய ஆறு பேர் ஆட்சியையும் கண்டு களித்த பெரு மூதாட்டியார் செம்பியன் மாதேவியார். அறுபது ஆண்டுகள் சிவப்பணி செய்திருக்கிறாள். கிட்டத் தட்ட எண்பது ஆண்டுகளாவது நில வுலகில் வாழ்ந்திருக்க வேண்டும். அந்தக் காலம் கி. பி. 920-1001 என்று துணியலாம்.

பண்டைச் சோழர் பணிகளான செங்கற் கோயில்கள் பலவற்றைக் கற்றளியாக எடுப்பித் தும், நித்திய நைமித்தியங்களுக்கு நிவந்தங்கள் ஏற்படுத்தியும், இறை திருவுருவங்களுக்கு அணி கலன்கள் அளித்தும், திருவுண்ணாழியில் நந்தா விளக்கு எரிய முதல் ஈய்ந்தும், நந்தவனம் ஏற் படுத்தியும் பல்லாற்றானும் சிவத்தொண்டு புரிந் திருக்கிறாள். செம்பியன் மாதேவியார் கற்றளியாக எடுப்பித்த கோயில்கள் பலவற்றுள் 1. திருநல்லம், 2. தென் குரங்காடுதுறை, 3. திருவக்கரை, 4. திருகோடிக்கா, 5. திருத்துருத்தி, 6. திரு முதுகுன்றம், 7. திருவாரூர் அரநெறி, 8. திரு மணஞ்சேரி, 9. செம்பியன் மாதேவி ஆகிய ஒன்பதைப் பற்றி உறுதியாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இவற்றுள் திருநல்லம் என்னும் கோனேரி ராசபுரத்தில் செங்கலாற் கட்டப் பெற்றிருந்த கோயிலைக் கற்றளியாக எடுப்பித்து, அக் கோயி லில் கண்டர் ஆதித்தன் சிவலிங்கத்திற்குப் பூசை செய்வது போல ஒரு ஓவியம் சமைப்பித்துள் ளாள். அந்தத் திருக்கோயிலுக்குத் தன் கணவன் பெயரான ஸ்ரீ கண்டராதித்தர் என்ற பெயரையே சூட்டி மன நிறைவு கொண்டிருக்கிறாள். அச் சிற்பத்தின் அடியில் காணப்பெறும் கல்வெட்டைப் படித்துப் பார்த்தால் செம்பியன் மாதேவிக்கு உள்ள சிவ பக்தியின் ஊற்றமும், பதிபக்தியின் ஏற்றமும் தெள்ளிதிற் புலனாகும். அது வருமாறு—

**''ஸ்வஸ்தி ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார்**
**மாதேவடிகளாரான ஸ்ரீ செம்பியன் மாதேவியார்**
**தம்முடைய திருமகனார் ஸ்ரீ மதுராந்தக தேவரான**
**ஸ்ரீ உத்தம சோழர் திருராஜ்யஞ் செய்தருளா நிற்க**

*தம்முடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால்*
*திருநல்லமுடையார்க்குத் திருக்கற்றளி எ(ழுந்)[டுத்]*
*தருளிவித்து*
*இத் திருக்கற்றளிலே(ய்) திருநல்லமுடையாரைத்*
*திருவடி(த்)*
*தொழுகின்றாராக எழுந்தருளுவித்த ஸ்ரீ கண்டராதித்த*
*தேவர் இவர்''* –[S.I.I.–III–146]

பதி பக்தியும், சிவ பக்தியும் நிறைந்த இப் பிராட்டியார்தான் செம்பியன் மாதேவி என்ற பெயருடன் இன்று விளங்கும் இவ்வூர்த் திருக்கோயிலையும் கற்றளியாக எடுப்பித்தவர். ஆனால் இக் கோயிலை புதிதாகக் கட்டிக் கடவுண்மங்கலம் செய்தார் என்று கொள்வது பொருத்த மில்லை என்பது என் கருத்து. இங்குள்ள திருக்கோயில் பழமையானதாகவே இருக்கவேண்டும். சமய குரவர்களின் பாடலும் இதற்கு இருந்திருக்கலாம். ஆகவேதான் அப் பெருமாட்டிக்கு இதைக் கற்றளியாக எடுக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். அதன் பின்னர் இவ் ஊரைச் சார்ந்த நிலபுலங்களை இறையிலியாக ஆக்கி அவற்றை அந்தணர்கட்கு அளித்துக் காத்திருக்கிறாள். அதன் காரணமாக இவ்வூருக்கு செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இப் பெருமாட்டி கற்றளியாக எடுப்பித்திருக்கும் மற்ற திருக்கோயில்கள் யாவும் பாடல் பெற்ற பழம் பெரும் திருக்கோயில்களே. இராசராசன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலும் தஞ்சைத் தளிக்குளம் என்னும் பாடல் பெற்ற கோயிலே யாகும். இவற்றை எல்லாம் மனத்துட்கொண்டு பார்த்தால் இக் கோயிலும் பாடல் பெற்ற ஒரு பழங் கோயிலாகவே இருக்க வேண்டும் என்பது தெளிவு. அன்றியும் செம்பியன் மாதேவி புதிதாக எடுப்பித்த கோயிலாக இருந்தால் செம்பியன் மாதேவீச்சுரம் என்று இதன் பெயர் அமைந்திருக்கக் கூடும். ஆனால், ஸ்ரீ கயிலாயம் என்று பெயர் கொண்டிலங்குகிறது. பெருமான் பெயரும் ஸ்ரீ கயிலாசமுடைய மகா தேவர், திருக்கயிலாயமுடையார் என்றே காணப் பெறுகிறது. இக்கோயிலுக்கு ஸ்ரீ கயிலாயம் என்ற பெயர் எப்பொழுது ஏற்பட்டது? காரணம் என்ன? இத்தலம் பழமை யானதா? அப்படியானால் வேறு பழம் பெயர் உண்டா? அப் பெயர் என்ன? அப் பெயர் தேவாரம் முதலிய திருமுறைகளில் எங்கேனும் காணப்பெறுகிறதா? இவற்றை எல்லாம் முயன்று கண்டறிய வேண்டும். ஆண்டவன் அருளும், அறிஞர்கள் ஆராய்ச்சியும் அதற்குத் துணை புரியட்டும்.

அருமையும் பெருமையு முள்ள இத்தலத்தின் உண்மை வரலாற்றை எழுதி வெளியிட, தேவதானத்தார் ஆர்வம் கொண்டனர். எல்லா வகையாலும் தக்கார் ஒருவரை இசையச் செய்தனர். அவர்தான் சைவத்திருவாளர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள். வரலாற்று நூலறிவும், கல்வெட்டு ஆராய்ச்சியும், இலக்கியப் புலமையும், சரித்திரத் தேர்ச்சியும், சமய ஒழுக்கமும், சீரிய


பண்பாடும் நிரம்பிய நுண்மாண் நுழை புலம் உடையவர். பன்னூல் எழுதிப் பழுத்தவர். இப் பணியை நிறைவேற்ற அவர்களைத் தேர்ந்தெடுத்த ஒன்றே போதும் தேவதானத்தார் கொண்ட உண்மை ஆர்வத்தைப் பலப்படுத்த.

இம்மலர் சிறிதே. சுறுக்கமாக இருப்பினும் விளக்கம் தருகிறது. இச் சிறு மலரிலும் ஆசிரியரின் அறிவு ஒளிர்கிறது. அனுபவம் மணக்கிறது. மேலும் கல்வெட்டுப்படிகள் அனைத்தை அப்படியே வெளியிடலாம். கோயிலின் வரைப்படத்தை விளக்கக் குறிப்புடன் இணைக்கலாம். இப்படி எல்லாம் சொல்வதைக் குறை கூறுவதாகக் கருதி விடப்படாது. நல்லார்வத்துடன் விடுக்கும் வேண்டுகோள்தான் இது.

இந்தப் பவித்திரமான பணியை ஏற்றுச் செவ்விய முறையில் எழுதி உபகரித்த பெரியார்க்கும், இந்த நல்ல முயற்சியில் அக்கறை காட்டிய செம்பியன்மாதேவித் திருக்கோயில் அறங்காவலர்களுக்கும், இறைபணியாளருக்கும் அம்மையப்பன் திருவருள் பெருகுவதாக. அவர்களுக்கு நம்முடைய வணக்கமும் பாராட்டுக்களும் உரியதாகுக.

இத்தகைய முறையில் தலவரலாறு எல்லாப் பெருங்கோயில்களுக்கும் எழுதி வெளியிட மாநில அறநிலையினர் ஏற்பாடு செய்தால் அறிவும் பயனும் பெருகும். ஆண்டவன் அருள்க.

---



முற்றுப் பெறுக் முன் கோபுரக் தோற்றம்

# நூலாசிரியரைப் பற்றி....

தென்னகத்துக் கலைக் கோயில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளரும் ஆராய்ச்சிப் பேரறிஞரும் ஆகிய திருவாளர் தி. வை. **சதாசிவ பண்டாரத்தார்** அவர்கள் தஞ்சை வளநாட்டில் குடந்தை நகர்க்கு அருகே உள்ள திருப்புறம்பயம் என்ற ஊரிற் பிறந்தார்கள். குடந்தை நகர் உயர்நிலைப் பள்ளியிற் பயிலுங்காலத்து ஆசிரியர் பாலசுப்பிரமணிய பிள்ளையவர்களிடத்தும் நற்றிணை யுரையாசிரியர் நாராயணசாமி அய்யர் அவர்களிடத்தும் சிறப்பு முறையில் தமிழிலக்கியமும் தமிழக வரலாறும் கல்வெட்டுக்களும்ஆகியவற்றின் அமைப்பினைப் பயின்று தெளிந்து செந்தமிழ், தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வி முதலிய இலக்கிய இதழ்களில் அரும் பொருட் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்கள். 1. **முதற் குலோத்துங்கன்,** 2. **பாண்டியர் வரலாறு** என்ற இரு நூல்களும் இவர்கள குடந்தை வாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருக்கும் பொழுது எழுதி வெளியிட்ட நூல்களாம். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையில் அமர்ந்து ஆராய்ந்தெழுதிய 1. **பிற்காலச் சோழர் சரித்திரம்** முதற் பகுதி 2. **பிற்காலச் சோழர் சரித்திரம்** இரண்டாம் பகுதி 3. **தமிழிலக்கிய வரலாறு (இருண்ட காலம்)** 4. **தமிழிலக்கிய வரலாறு (13, 14, 15-ம் நூற்றுண்டுகள்)** என்ற நூல்கள் பெரும் புலவர்களாற் பாராட்டப்பெற்று வருதலை

யாவரும் அறிவர். இவர்கள் '**சோழரது அரசியல்**' என்ற நூலை இப்பொழுது எழுதி வருகிருர்கள்.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் 1956-ல் செட்டி நாட்டரசர் **டாக்டர் M. A. முத்தையா செட்டியாரவர்கள்** தலைமையில் இவர்களுக்குப் பொன்னுடைப் போர்த்து "**ஆராய்ச்சிப் பேரறிஞர்**" என்ற பட்டம் வழங்கியிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. வாழ்க அவர்கள்! வளர்க அவர்தம் தொண்டு!!

**பதிப்பகத்தார்.**

# செம்பியன்மாதேவித் தலவரலாறு

## 1

**இருப்பிடம்:**

செம்பியன் மாதேவி என்பது தஞ்சாவூர் ஜில்லா நாகப்பட்டினம் தாலுகாவிலுள்ள ஒரு சிவத்தலமாகும். திருவாரூரிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லும் இருப்புப் பாதையில் கீழ்வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே இரண்டு மைல் சென்று, தேவூர் என்ற பாடல் பெற்ற சிவத்தலத்தை அடைந்து அவ்வூரிலிருந்து தென் கிழக்கே போகும் பெரு வழியில் நான்கு மைல் சென்ருல் இத்தலத்தை அடையலாம். இத்தலத்திற்குத் தெற்கே ஐந்து மைலில் குண்டையூரும், ஆறு மைலில் திருக்குவளை என்று வழங்கும் திருக்கோளிலி என்ற பாடல் பெற்ற தலமும், எட்டு மைலில் திருப்புகழ் பெற்ற எட்டுக்குடி என்ற தலமும், தென்மேற்கே ஆறு மைலில் வலிவலம் என்ற பாடல் பெற்ற தலமும், மேற்கே நான்கு மைலில் திருவிசைப்பா பெற்ற சாட்டியக்குடி என்ற தலமும், ஐந்து மைலில் கன்ருப்பூர் என்ற பாடல் பெற்ற தலமும், வடக்கே ஆறு மைலில் சிக்கல் என்ற பாடல் பெற்ற தலமும், வடகிழக்கே எட்டு மைலில் நாகைக்காரோணம் என்ற பாடல் பெற்ற தலமும் இருக்கின்றன.

## திருக்கோயில் :

இவ்வூரிலுள்ள கோயில் ‘ ஸ்ரீ கயிலாசம் ’ என்ற பெயருடையது ; இக்காலத்தில் கயிலாசநாத சுவாமி கோயில் என்று வழங்குகின்றது. இது கிழக்கு நோக்கிய திருவாயிலையுடையது ; கீழ் மேல் 298 அடி நீளமும் தென்வடல் 267 அடி அகலமும் உடையது. ஆகவே, கோயிலின் பரப்பு ஏறத்தாழ 79,566 சதுர அடிகள் உடையது எனலாம். கோயிலில் இரண்டு பிராகாரங்கள் உள்ளன. முதற்பிராகாரம் திருச்சுற்று மாளிகையுடன் அமைந்தது. முதற்பிராகாரத்தின் திருவாயிலைத் திருமாளிகைத் திருவாயில் என்று பெரியோர் வழங்குவர். இதில் மூன்று நிலைக்கோபுரம் ஒன்று இருத்தல் காணலாம். இரண்டாம் பிராகாரத்தின் திருவாயிலைத் திருத்தோரணவாயில் என்று கூறுவது வழக்கம். இதில் முடிவு பெறாத இரு நிலையுடனுள்ள ஒரு கோபுரம் உளது.

இக்கோயிலிலுள்ள மண்டபம் ஒன்று செம்பியன் மாதேவியார் பெருமண்டபம் என்ற பெயருடையது என்பதும் அதில் கிராம சபையார் கூட்டம் நடத்தி வந்தனர் என்பதும் அறியத்தக்கனவாகும்.

## மூர்த்திகள் :

திருக்கோயிலில் மூலத்தானத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் கயிலாச நாதசுவாமி என்று இந்நாளில் கூறப்பெறுவர். கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் அப்பெருமான் ஸ்ரீ கயிலாசமுடைய மகாதேவர் என்று குறிக்கப்பட்டுள்ளனர். முதற்பிராகாரத்தில் சோமாஸ்கந்தர், நடராசர், தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர்,





விசுவநாதர், சூரியன், வயிரவர் ஆகிய மூர்த்திகளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் கோயில்கள் இருக்கின்றன. இரண்டாம் பிராகாரத்தில் கிழக்கு நோக்கிய திருவாயிலுடன் அம்பிகையின் கோயில் உள்ளது. அதற்குத் தனிப் பிராகாரமும் இருக்கின்றது. அம்பிகையின் திருப்பெயர் பிருகந்நாயகி (பெரிய நாயகி) என்று வழங்குகின்றது. இரண்டாம் பிராகாரத்தில் சுப்பிரமணியர்க்கு ஒரு கோயிலும் நந்திதேவர்க்கு ஒரு மண்டபமும் இருக்கின்றன.

## தலவிருட்சமும் தீர்த்தமும் :

இத்தலத்திற்குரிய விருட்சம் அரசமரமாகும். சதுர்வேத புஷ்கரணி (நான்மறைக்குளம்) என்ற பெயருடைய திருக்குளம் இத்தலத்திற்குரிய தீர்த்தமாக உள்ளது.

## திருவிழாக்கள் :

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் இக்கோயிலில் பத்து நாட்கள் நடைபெறும் பிரமோற்சவமே பெரிய திருவிழா ஆகும். மார்கழி மாதத்தில் திருவாதிரை விழாவும் சிறப்பாக நடந்து வருகின்றது. அன்றியும், ஆனியில் திருமஞ்சனமும், ஆடியில் பூரமும், ஆவணியில் பிள்ளையார் சதுர்த்தியும், புரட்டாசியில் நவராத்திரியோடு விசயதசமியும், ஐப்பசியில் சூரசங்காரமும், கார்த்திகையில் கார்த்திகை தீபமும், தையில் பூசமும், மாசியில் மகமும் அவ்வம் மாதங்களில் நடந்து வரும் திருவிழாக்கள் ஆகும். இக்கோயிலுக்குரிய இரண்டு தேர்களும் பழுதுற்ற நிலையில் உள்ளன.

### கோயிலின் வருவாயும் நிர்வாகமும் :

இக்கோயிலுக்கு நன்செயில் 279 ஏக்கர் 81 செண்டும், புன்செயில் 115 ஏக்கர் 10 செண்டும் நிலங்கள் உண்டு. ஆண்டுதோறும் அவற்றிலிருந்து கிடைத்து வரும் சராசரி மொத்த வருவாய் ஏறத்தாழ ரூ. 25,000 ஆகும்.

இக்கோயில் நிர்வாகம் சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தின் தலைவர் 1947-ல் உத்தரவிட்ட ஒரு திட்டத்தின்படி (Scheme) நடந்து வருகின்றது. மூன்று பேருக்குக் குறையாத டிரஸ்டிகளும் ஷை இலாகாவினால் நியமனஞ் செய்யப் பெற்ற ஒரு நிர்வாக அதிகாரியும் இக்கோயிலைப் பரிபாலித்து வருகிறார்கள். நிர்வாகம், இந்து அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் 1951–ஆம் ஆண்டின் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் உட்பட்டு நிகழ்ந்து வருகின்றது.

### சில சிறப்புக் குறிப்புகள் :

(1) சென்னை அறநிலைய இலாக்கா ஆணையர் விரும்பியபடி நிர்வாக அதிகாரியால் சோழர் பேரரசியார் செம்பியன்மாதேவியாருக்குக் கோயிலில் ஒரு தனி மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. (2) ரூ 40,000-க்குத் திருப்பணி நடைபெற்று வருகிறது. (3) தஞ்சை ஜில்லா போர்டு மருத்துவ நிலையத்திற்கு ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (4) பொதுமக்களுக்குப் பயன்படுமாறு ஒரு குளம் வெட்டிப் படித்துறைகள் கட்டப்பெற்றுள்ளன. (5) ரூ. 6,150–க்கு ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. (6) 30 ஏழை பள்ளிச் சிறுர்களுக்கு மதிய உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இக்கோயிலார் பொதுமக்கள் நலத்தின் பொருட்டும் பல்வகைத் தொண்டுகள் புரிந்து வருவது பலரும் அறிந்து மகிழத்தக்கதொன்றாம்.

27 அ.சு:3ந.2114 N58
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111340
2

### கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்திகள்

இக்கோயிலில் இருபத்து மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றை அரசாங்கக் கல்வெட்டிலாகா அறிஞர்கள் படி எடுத்து, அவற்றின் சுருக்கத்தைத் தென்னிந்திய கல்வெட்டிலாகாவின் 1925–26–ஆம் ஆண்டறிக்கையில் வெளியிட்டிருக்கின்றனர். அக்கல் வெட்டுக்களின் துணைகொண்டு ஊர், கோயில் இவற் றின் பழைய வரலாற்றை ஆராய்ந்து அறிந்து கொள்ள லாம்.


சோழ மண்டலத்திலிருந்த ஒன்பது வளநாடுகளுள்,[1] ஒன்றாகிய அருமொழிதேவ வளநாட்டின் உள்நாடு களுள் ஒன்றாகிய அளநாட்டில் உள்ளது செம்பியன் மகாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர். இவ் வூரைப் புதிதாகத் தம் பெயரால் அமைத்துச் சதுர்வேதி களான அந்தணப் பெருமக்களுக்குப் பிரமதேயமாக வழங்கியவர் செம்பியன்மகாதேவி என்ற அரசியார் ஆவார். இவ்வம்மையார்; முதற்பராந்தக சோழரின்

[1] ஒன்பது வளநாடுகள்: அருமொழிதேவ வளநாடு, க்ஷத்திரியசிகாமணி வளநாடு, உய்யக்கொண்டான் வளநாடு, நித்தவினோத வளநாடு, பாண்டிய குலா சனி வளநாடு, கேரளாந்தக வளநாடு, இராசாசிரய வளநாடு, இராசராச வளநாடு, இராசேந்திரசிங்க வளநாடு என்பனவாம்.

இரண்டாம் புதல்வரும், சோழ இராச்சியத்தில் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து கி. பி. 950 முதல் 957 வரையில் ஆட்சி புரிந்தவரும், தில்லைச்சிற்றம்பலவாணர் மீது திருவிசைப்பாப் பதிகம் ஒன்று பாடியவரும் ஆகிய கண்டராதித்த சோழரின் மனைவியார். இவ்வூரில் 'ஸ்ரீ கயிலாசம்' என்ற பெயருடைய திருக்கோயிலைக் கட்டியவரும் இம்மகாதேவியாரேயாவர். இச்செய்திகள் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களால் நன்கு புலப்படுகின்றன. இவ்வரசியார்க்கு உத்தம சோழர் என்ற புதல்வர் ஒருவர் இருந்தனர். அவ்வேந்தர் பெருமான் கி.பி. 970 முதல் 985 வரையில் அரசாண்டவர். அவரது ஆட்சிக் காலத்தில்தான் இவ்வூரும் திருக்கோயிலும் செம்பியன்மாதேவியாரால் அமைக்கப்பெற்றன என்று தெரிகிறது. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களுள் உத்தம சோழரது ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டாகிய கி. பி. 981-ல் வரையப்பெற்ற கல்வெட்டே மிக்க பழமை வாய்ந்ததாகும். எனவே, இக்கோயில் கி. பி. 981 ஆண்டிற்கு முன்னர்க் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பது திண்ணம். இனி, உத்தம சோழர் காலமுதல் ஒவ்வோர் அரசரது ஆட்சிக் காலத்தும் நிகழ்ந்தவற்றைக் காண்போம்.

### 1. உத்தம சோழர் காலம் : கி. பி. (970 - 985)

இவ்வேந்தர் காலத்துக் கல்வெட்டுக்கள் எட்டு உள்ளன. அவற்றுள் ஒன்று, இம்மன்னர் பெருமானுடைய மனைவிமாருள், பட்டன்தானதுங்கியார், மழபாடித் தென்னவன்மாதேவியார், இருங்கோளர் மகளார் வானவன்மாதேவியார், விழுப்பரையர் மகளார் கிழானடிகள், பழுவேட்டரையர் மகளார் என்ற ஐவரும், தம்



புதிய மண்டபத்தில் செம்பியன்மாதேவியார்

மாமியார் செம்பியன்மாதேவியார் பிறந்த நாளாகிய சித்திரைத் திங்கள் கேட்டை நாளில் திருக்கயிலாசமுடைய மகாதேவர்க்கு ஆண்டுதோறும் சிறப்பு வழிபாடும் விழாவும் நடத்துவதற்கு முதற்பொருள் கி. பி. 981-ம் ஆண்டில் வழங்கியதை உணர்த்துகின்றது.[2]

கி. பி. 984-ல் உத்தம சோழருடைய பட்டத்தரசியார் திரிபுவனமாதேவியார் என்பார், திருக்கயிலாசமுடையார்க்கு நாள் வழிபாட்டிற்கு அளித்த இறையிலி நிலங்களையும் திங்கள் தோறும் முதல்நாளில் கோயிலில் நிகழ வேண்டிய சிறப்பு வழிபாட்டிற்குரிய பொருள்களையும் அவ்வழிபாட்டிற்கு அவ்வரசியார் அளித்த நிபந்தத்தையும் இரு கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.[3]

கி. பி. 984-ல் உத்தம சோழருடைய மனைவியருள் பட்டன்தானதுங்கியாரும் பஞ்சவன் மாதேவியாரும் திருக்கயிலாசமுடைய மகாதேவர்க்கு முறையே நெற்றிப் பொற்பட்டமும் பொன்னால் அமைந்த கைப்பிடியுடைய வெண்சாமரையும் அளித்தமையை இரண்டு கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[4]

கி. பி. 984-ல் சொன்னமாதேவியார் என்ற கண்ணப்பரசியார் என்பார், சித்திரைக் கேட்டை நாளில் கோயிலில் நடைபெறும் செம்பியன்மாதேவியாரின்

---

[2] Annual Report on South Indian Epigraphy for the year *1925 – 26*, Inscription No. *494* of *1925*.

[3] Ins. Nos. *485* and *488* of *1925*.

[4] Ins. Nos. *490* and *491* of *1925*.

பிறந்தநாள் விழாவிற்கு 507½ கழஞ்சு பொன் அளித்ததையும், தொண்டை மண்டலத்துப் பங்கள நாட்டினர் ஒருவர் விழாவில் ஆண்டுதோறும் அடியார்களுக்கு உணவளித்தற் பொருட்டு 150 பொன் முதற்பொருளாகக் கொடுத்துள்ளதையும் இரு கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.[5] முதல் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற சொன்ன மாதேவியார் உத்தம சோழரின் மனைவிமாருள் ஒருவராயிருத்தல் வேண்டும்.

கி. பி. 985-ல் பட்டத்தரசியார் திரிபுவனமாதேவியார் ஆண்டுதோறும் சித்திரைக் கேட்டையில் கோயிலில் நிகழும் தம் மாமியாரின் பிறந்தநாள் விழாவிற்குப் பொருள் வழங்கியதையும், அவ்வாண்டிலேயே உத்தம சோழருடைய மற்றொரு மனைவியார் ஆரூரன் அம்பலத்தடிகளார் என்பார், அவ்விழாவிற்கு 590 கழஞ்சு பொன் அளித்ததையும் ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.[6]

**2. முதல் இராசராச சோழர் காலம்: (கி.பி. 985-1014)**

உத்தம சோழர்க்குப் பின்னர் அரசாண்ட முதல் இராசராச சோழர் காலத்துக் கல்வெட்டுகள் நான்குள்ளன. அவற்றுள், கி. பி. 987-ல் வரையப்பெற்ற கல்வெட்டு, செம்பியன்மாதேவியார் திருக்கயிலாசமுடைய மகாதேவர்க்கு வழங்கிய நெற்றிப் பட்டம், பொற்பூக்கள், பொற்கலசம் முதலானவற்றையும் அவற்றின் நிறையையும் அறிவிக்கின்றது.[7]

கி. பி. 990-ல் வரையப் பெற்ற கல்வெட்டொன்று சிதைந்த நிலையில் உள்ளது. அது, செம்பியன்மாதேவிச்

5 Ins. Nos. *492* and *489* of *1925*.
6 No. *496* of *1925*. 7 *497* of *1925*.



சதுர்வேதிமங்கலத்துக் கிராம சபையார் தம் செயற்குழுவினரான ஊர்வாரியப் பெருமக்களுக்கு அனுப்பிய ஓர் உத்தரவின்படியாகத் தோன்றுகிறது.[8] அரசாங்க உத்தரவுகள், கிராமசபையாரின் முடிபுகள் ஆகிய இவற்றுள் இன்றியமையாதனவாய் என்றும் வைத்திருத்தற்குரியவற்றைக் கோயில் கருங்கற்சுவர்களில் யாவரும் பார்க்கக்கூடிய வெளிச்சமுள்ள இடங்களில் பொறித்துவைப்பது அக்கால வழக்கமாகும். அத்தகைய கல்வெட்டுக்கள் பல கோயில்களில் இருத்தலை இக்காலத்தும் காணலாம்.

கி. பி. 990-ல் திருக்கயிலாசமுடையார் கோயில் நிலங்கள் சிலவற்றிற்குக் கிராம சபையார் வரி நீக்கியதை ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.[9]

கி. பி. 992-ல் உத்தம சோழரின் பட்டத்தரசியார் திரிபுவனமாதேவியார் சித்திரைக்கேட்டையில் கோயிலில் நடத்தப்பெறும் தம் மாமியாரின் பிறந்தநாள் விழாவிற்கு முதல் பொருளாக நூறு பொற்காசு அளித்ததை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.[10]

**3. முதல் இராசேந்திர சோழர் காலம்: (கி. பி. 1012-1044)**

முதல் இராசராச சோழர்க்குப் பிறகு ஆட்சிபுரிந்த முதல் இராசேந்திர சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. அவற்றுள், ஒரு கல்வெட்டு, நந்தவனத்தின் பாதுகாப்பிற்குக் கொடுக்கப்பட்ட நிலத்திற்குக் கிராம சபையார் வரிதள்ளியதையும், முதல் இராசேந்திர சோழர், கி. பி. 1019-ல் இடபவாகன தேவரையும்,

8 *495 of 1925*. 9 *493 of 1925*. 10 *480 of 1925*.

செம்பியன்மாதேவியாரையும், கோயிலில் எழுந்தருளுவித்த செய்தியையும், அவர்களின் நாள் வழிபாட்டிற்கு அளிக்கப்பெற்ற நிலங்களுக்குக் கிராம சபையார் வரி நீக்கியதையும் தெரிவிக்கின்றது. [11]

மற்றொரு கல்வெட்டு, கிராம சபையார் கோயிலிலுள்ள செம்பியன்மாதேவியார் பெரிய மண்டபத்தில் கூட்டம் நடத்தித் தம்மூர்க்கு மேற்பிடாகையாயுள்ள மோகனூர் ஆதித்தேசுவரமுடையமகாதேவர் தேவதான நிலங்களிலிருந்து கிடைத்துவரும் 'வெள்ளான் வெட்டி' என்ற வரிப்பொருளைக்கொண்டு அக்கோயிலில் நாள் தோறும் சந்திவிளக்கு ஏற்றிவரவேண்டுமென்று செய்த ஒருமுடிபினை உணர்த்துகின்றது. [12] இது வேறொரு கோயிலைப்பற்றிய கல்வெட்டாகும்.

கி. பி. 1035-ல் பொறிக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுக்கள் [13] சுவரால் மறைக்கப்பட்டு முதல் இராசேந்திர சோழரின் மெய்க்கீர்த்தியோடும் நாட்டின் பெயரோடும் நின்றுவிட்டமையால், அவற்றில் கோயிலைப் பற்றிய செய்திகள் ஒன்றுமில்லை.

### 4. முதல் இராசாதிராச சோழர் காலம்: (கி. பி. 1044—1054)

முதல் இராசேந்திர சோழர்க்குப் பின்னர் அரசாண்ட முதல் இராசாதிராச சோழர் காலத்துக் கல்வெட்டொன்றால் திருவேழிருக்கை மகாதேவர் கோயில்

[11] 481 of 1925. [12] 483 of 1925.
[13] Nos. 486 and 487 of 1925.



நிலங்கள் சிலவற்றிற்கு அரசர்பெருமான் வரி தள்ளிய செய்தி அறியப்படுகின்றது. [14] திருஏழிருக்கை என்பது திருச்சாட்டியக்குடியிலுள்ள திருக்கோயிலின் பெயர். கருவூர்த் தேவர் பாடிய திருச்சாட்டியக்குடி திருவிசைப்பாப் பதிகம் முழுதும் "சாட்டியக்குடியார்... .........ஏழிருக்கையிலிருந்த ஈசனுக்கே" என வருதல் காண்க.

### 5. மூன்றாம் இராசராச சோழர் காலம்: (கி. பி. 1216—1256)

மூன்றாம் குலோத்துங்க சோழரின் புதல்வர் மூன்றாம் இராசராச சோழர் காலத்தில் கி. பி. 1233-ல் வரையப்பட்ட கல்வெட்டொன்று, சண்டேசுவர நாயனார் கோயிலில் உள்ளது. [15] இதில் கிராம சபையார், கிராம காரியங்களைப் பார்ப்பதற்குப் பகலிலேயே தம் கூட்டங்களை நடத்த வேண்டுமென்றும், இரவில் நடத்தக் கூடாதென்றும், முன்னர் உறுப்பினராக இருந்தவர்களை ஐந்து ஆண்டுகள் வரையில் மீண்டும் தேர்ந்தெடுக்கக் கூடாதென்றும் செய்த முடிபுகள் காணப்படுகின்றன.

### 6. சடையவர்மர் வீரபாண்டியர் காலம்: (கி. பி. 1253-1268)

சடையவர்மர் சுந்தர பாண்டியர் சோழ மண்டலத்தைக் கைப்பற்றித் தம் ஆட்சிக்கு உட்படுத்திய காலத்தில் அங்குப் பிரதிநிதியாயிருந்து அரசாண்ட வீர பாண்டியர் நாளில் பொறிக்கப் பெற்ற இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. [16] அவை, பெரிய நாட்டார்

[14] 484 of 1925. [15] 500 of 1925.
[16] Nos. 499 and 501 of 1925.

உத்தமவேதப் பெருமாள் என்ற கல் தச்சனைக் கொண்டு கோயிலைப் புதுப்பித்ததையும், தம் தம் கிராமங்களில் வேலி ஒன்றுக்குக் கல நெல் வீதம் கோயிலுக்குக் கொடுத்து வர ஏற்பாடு செய்ததையும், திருப்பணியை நிறைவேற்றிய அக்கல் தச்சனுக்குக் கோயில் அதிகாரிகள் கி. பி. 1262-ல் எல்லா உரிமைகளோடும் ஒரு வீடு அளித்ததையும் கூறுகின்றன.

### 7. அரசரின் பெயரும் ஆண்டும் காணமுடியாத மூன்று கல்வெட்டுக்கள் :

சுவரால் மறைக்கப் பெற்ற அக் கல்வெட்டுக்களுள் ஒன்று, திருக்கயிலாசமுடைய மகாதேவர்க்குத் திங்கள் தோறும் முதல் நாளில் சிறப்பு அபிடேகம் நிகழ்த்துவதற்கும் நுந்தா விளக்கு வைப்பதற்கும் உத்தராயண தட்சிணாயன நாட்களில் கோயிலில் நூறு அந்தணர்களை உண்பித்தற்கும் செம்பியன்மாதேவியார் நிலம் வழங்கியதை உணர்த்துகின்றது.[17]

மற்றொரு கல்வெட்டு, சித்திரைக் கேட்டையில் கோயிலில் நடைபெறும் விழாவிற்கு அருமொழி அரிஞ்சிகைப் பிராட்டியாரும் குந்தவையாரும் 220 கழஞ்சு பொன் அளித்ததை அறிவிக்கின்றது.[18] குந்தவையார் முதல் இராசராச சோழரின் தமக்கையார் ஆவர்.

பிறிதொரு கல்வெட்டு, கோயிலுக்கு வழங்கப்பெற்றுள்ள அணிகலன்கள் எல்லாவற்றையும் தெரிவிக்கின்றது.[19]

[17] 479 of 1925. [18] 482 of 1925. [19] 498 of 1925.



## செம்பியன்மாதேவிக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் ஒன்று.

*[கர்ப்பக்கிரகத்தின் தென்புறத்திலுள்ளது.]*

*(1)ஸ்வஸ்தி ஸ்ரீ கோ (2) இராஜகேசரிபந்ம (3)ற்கு யாண்டு ௩ ஆவது (4) தென்கரை அளநா (5) ட்டு பிரமதேயம் ஸ்ரீ (6) செம்பியன்மாதேவிச் (7) சதுர்வேதிமங்கலத்து (8) ஸ்ரீ கைலாசமுடையமகா (9) தேவற்கு ஸ்ரீ உத்தமசோழ (10) தேவர்தங்களாச்சி ஸ்ரீ பிராந்த (11) கன் மாதேவடிகளாரான ஸ்ரீ செம் (12) பியன்மாதேவியார் இவ்வாண்டு மீ (13) ன நாயிற்றுக்குடுத்தள பொன் க (14) லசம் ஒன்று இது இவ்வூர்க் கல்லால் (15) பொன்னூற்றுத் தொண்ணூற்றுக்கழ (16) ஞ்சு பொன்னின் பட்டம் இரண்டினால் (17) மேற்படி கல்லா [ல்] நிறை தொண்ணூற் (18) று கழஞ்சும் பொற்பூ ஒன்றுபொ [ன்] (19) [முக்] கழஞ்சே முக்காலாகப் பொற்பூமூ (20) '[ன்றுக்கு] மேற்படி கல்லா[ல்] நிறைபதி (21) னொரு கழஞ்சேகாலும் பொற்பூ ஒன் (22) ......முக்கழஞ்சே முக்காலேமஞ் (23) சாடியாகப்பொற்பூ இருபத்தொன்றி (24) னால் மேற்படி கல்லால் நிறை எழுபத்தொ (25) ன்பதின் கழஞ்சே முக்காலே மஞ்சா (26) டியும் பொற்பூ........ (27)ழஞ்சே முக்கால் இரண்டு மஞ்சாடியாக(28) பொற்பூ இரண்டினால் மேற்படி கல் (29) லானிறை ஐங்கழஞ்சரையே நாலு (30) மஞ்சாடியும் ஆக இவை இத்த (31) னையும் பன்மாகேஸ்வர ரக்ஷை (32) 11உ*


(No. 497 of 1925.) – South Indian Inscriptions, Vol. XIII. No. 72

# 3

## செம்பியன்மாதேவியார் வரலாறு

செம்பியன்மாதேவி என்ற இந்த ஊரையும் இதிலுள்ள திருக்கோயிலாகிய ஸ்ரீ கயிலாசத்தையும் அமைத்த செம்பியன்மாதேவியார், சேரமன்னர்களுள் ஒரு கிளையினரான மழவர் பெருங்குடியில் பிறந்தவர்; சோழச் சக்கரவர்த்தியாகிய முதற் பராந்தக சோழரின் (கி.பி. 907–953) இரண்டாம் புதல்வரும், சிவபத்தியும் செந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே அமையப்பெற்ற சிவஞானச் செல்வரும் ஆகிய முதற்கண்டராதித்தசோழரின் பட்டத்தரசியாராக விளங்கியவர்; உத்தம சோழரை (கி. பி. 970–985) த்தம் திருமகனாராகப்பெற்றவர்; தம் கணவரைப் போல எல்லையற்ற சிவபத்தியுடையவர்; அறிஞர்களால் மாதேவடிகளார் என்று பாராட்டப்பட்டவர். இவற்றை,

> 'மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்த பெருமாள் தேவியார் ஸ்ரீ செம்பியன்மாதேவியார்' எனவும், 'ஸ்ரீ உத்தமசோழ தேவரைத் திருவயிறு வாய்த்த ஸ்ரீ செம்பியன்மாதேவிப் பிராட்டியார்' எனவும் காணப்படும் கல்வெட்டுத் தொடர்களாலும்,



சோழப் பேரரசி
செம்பியன் மா தேவியார்

*கோராச கேசரிவர்மர்க்கு யாண்டு மூன்றுவதனிற்
பேராளர் வெண்காடர் தங்கோயில் மேலொரு
பைம்பொற்குடம்
ஓராயிரத் தொடைஞ்னூற்றுக் கழஞ்சினுல்
வைத்துகந்தாள்
சீரார் மழவர்கோன் பெற்றநம் செம்பியன்மாதேவியே*
(S. I. I. Vol. XIII No. *144*)

என்ற கல்வெட்டுப் பாடலாலும் நன்கு அறியலாம்.

இவ்வரசியார் முதலில் செய்த அறம், தம் மாமனர் முதற் பராந்தக சோழர் ஆட்சியில் கி. பி. 941–ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளிக்கு அண்மையிலுள்ள உய்யக் கொண்டான் மலையில் திருக்கற்குடி மாதேவர்க்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்குத் தொண்ணூறு ஆடுகள் அளித்தமையேயாகும். இவர்கள் தம் பேரனர் முதல் இராசராச சோழர் ஆட்சிக் காலத்தில் கி. பி. 1001-ல் தென்னார்க்காடு ஜில்லா, விழுப்புரம் தாலுகாவிலுள்ள திருவக்கரைக் கோயிலைக் கருங்கற்கோயிலாக அமைத்தமையே தம் வாழ்நாளின் இறுதியில் செய்த திருப்பணி என்று தெரிகிறது. அவ்வாண்டிற்குப் பிறகு இவர்கள் புரிந்த அறங்கள் எங்கும் காணப்படவில்லை. எனவே, அவ்வாண்டில்தான் இவர்கள் சிவபெருமான் திருவடியை எய்தியிருத்தல் வேண்டும். ஆகவே, இவர்கள் சற்றேறக் குறைய அறுபது ஆண்டுகள் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளும் பல்வகை அறங்களும் செய்து சைவ சமயத்திற்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளனர் என்று கூறலாம். எனவே, இவர்கள் எண்பத்தைந்து ஆண்டுகள் வரையில் இருந்தவர்களாதல் வேண்டும்.

இவர்கள் காலத்தில் சோழ இராச்சியத்தில் சக்கரவர்த்திகளாக வீற்றிருந்து அரசாண்ட சோழ மன்னர்கள் அறுவர்; அவர்கள் முதற் பராந்தக சோழர், முதற்கண்டராதித்த சோழர், அரிஞ்சயசோழர், சுந்தரசோழர், உத்தம சோழர், முதல் இராசராச சோழர் என்போர். அப்பெருவேந்தர்கள் இவ்வரசியார் புரிந்த அறச் செயல்களுக்கு உளம் உவந்து துணை நின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுகாறும் ஆராய்ந்து கண்ட அளவில், இவ்வரசியார் நம் தமிழகத்தில் பத்துச் செங்கற் கோயில்களைக் கருங்கற்கோயில்களாகக் கட்டியுள்ளனர் என்று தெரிகிறது. அவை, திருநல்லம், செம்பியன்மாதேவி, விருத்தாசலம், திருவாரூர் அரநெறி, திருமணஞ்சேரி, தென்குரங்காடு துறை (ஆடுதுறை புகைவண்டிநிலைய முள்ள ஊர்), திருக்கோடிகா, ஆநாங்கூர், திருத்துருத்தி (குற்றாலம் புகைவண்டி நிலையமுள்ள ஊர்), திருவக்கரை என்ற ஊர்களிலுள்ள சிவாலயங்களே யாகும். அன்றியும், பல கோயில்களுக்கு நாள் வழிபாட்டிற்கும், திருவிழாக்களுக்கும், மூவர் திருப்பதிகங்கள் பாடுவோர்க்கும், நுந்தா விளக்குகளுக்கும், நந்தவனங்களுக்கும் பல பல நிவந்தங்கள் அளித்துள்ளனர்; பல கோயில்களுக்கு விலை உயர்ந்த அணிகலன்களோடு பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட பல்வகைக் கலங்களும் வழங்கியுள்ளனர். இவ்வாறு இவர்கள் செய்துள்ள அறங்கள் மிகப் பலவாகும்.

இவ்வரசியார் புரிந்த தொண்டுகளுள் முதலில் வைத்துப் பாராட்டற்குரியது தஞ்சாவூர் ஜில்லாவில் கோனேரிராசபுரம் என்று இந்நாளில் வழங்கும் திருநல்லம் என்ற



ஊரிலுள்ள திருக்கோயிலைக் கருங்கற்கோயிலாகக் கட்டி, அதற்கு நாள் வழிபாடு, திருவிழா முதலானவற்றிற்கு நிவந்தமாக இறையிலி நிலங்கள் அளித்திருப்பதேயாம். அக்கோயிலைத் தம் ஒப்புயர்வற்ற கணவனார் கண்டராதித்த சோழர் பெயரால் அமைத்து, அதில் அவ்வரசர் பெருமான் சிவலிங்க வழிபாடு செய்வதாகத் திருவுருவம் ஒன்று வைத்திருப்பது உணரற்பாலது. இவ்வரசியாரின் ஆணையின்படி அக்கோயிலை அமைத்தவன் அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாகிய ஆலத்தூருடையான் சாத்தன் குணபத்தன் அரசரண சேகரன் என்பவன். அவனது தொண்டினைப் பாராட்டி அரசாங்கத்தார் அவனுக்கு இராசகேசரி மூவேந்தவேளான் என்ற பட்டம் வழங்கியிருத்தல் அறியத்தக்கது.

இவ்வம்மையார் தமக்குப் பணி செய்யும் பணிமகள் 'இலச்சியன் மழபாடி'யின் நலங்கருதித் திருவெண்காட்டுச் சபையாரிடம் 125 கழஞ்சு பொன்னுக்கு நிலம் வாங்கி அவ்வூர்க் கோயிலில் அந்தணர்க்கு அமுதளித்தலாகிய அறத்தினைச் செய்திருப்பது, எளியோர்பால் இவர்கள் கொண்ட பேரன்பினைப் புலப்படுத்துவதாகும்.

முதல் இராசராச சோழருடைய புதல்வரும் பேரரசரும் ஆகிய முதல் இராசேந்திர சோழர் என்ற கங்கைகொண்டசோழர் செம்பியன்மாதேவியிலுள்ள திருக்கயிலாசமுடையார் கோயிலில் கி.பி. 1019-ஆம் ஆண்டில் இவ்வரசியாரின் திருவுருவத்தை எழுந்தருளுவித்து வழிபாட்டிற்கு நிவந்தம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்க அரிய நிகழ்ச்சியாகும்.

செம்பியன்மாதேவிக் கோயிலில் செம்பியன் மாதேவிப் பெரு மண்டபம் அமைக்கப்பட்டிருத்தல் போல் செங்கற்பட்டு ஜில்லா திருமுக்கூடல் வேங்கடேசப் பெருமாள் கோயிலிலும் இவ்வரசியாரை நினைவு கூர்தல் காரணமாகச் செம்பியன்மாதேவிப் பெரு மண்டபம் என்ற மண்டபம் ஒன்று முதல் இராசராச சோழரால் கட்டப்பெற்றுள்ளது. அப்பெரு மண்டபம், ஊர்ச் சபையார் கூடித் தம் கடமைகளை நிறைவேற்றப் பயன்பட்டு வந்தது என்பது ஒரு கல்வெட்டால் புலப் படுகின்றது. திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள திரு மழபாடிக் கண்மையில் செம்பியன் மாதேவிப் பேரேரி என்ற ஏரி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தமை ஒரு கல்வெட்டால் தெரிகின்றது. அச் செயல்கள் முதல் இராசராச சோழர், முதல் இராசேந்திர சோழர் முதலான பேரரசர்கள் இவ்வரசியாரிடத்தில் எத்துணை அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர் என்பதை நன்கு புலப்படுத்துவனவாகும்.

அவ்வரசர் பெருமான்கள் சிவபத்தி, சமயப் பொறை முதலான உயர் குணங்கள் பலவும் ஒருங்கே அமையப் பெற்றுச் சமயத் தொண்டுகள் பல புரிந்து, ஒப்புயர்வற்ற பெரு வேந்தர்களாக விளங்கியமைக்குக் காரணம் இவ் வரசியாரால் இளமையில் வளர்க்கப் பெற்றமையே என்பது உணரற்பாலது. அறப் பெருஞ் செல்வியாராகிய இவ் வரசியாரது புகழ் நம் தமிழகத்தில் என்றும் நின்று நிலவுவதாக.

---

45

## செம்பியன்மாதேவியார் காலத்துச் சோழ மன்னர்கள்

- (1) பரகேசரி பராந்தக சோழர் I (கி.பி. 907 – 953)
  - இராசாதித்த சோழர்
  - (2) இராசகேசரி கண்டராதித்த சோழர் I (கி.பி. 950 – 957)
    - (5) பரகேசரி உத்தம சோழர் (970 – 985)
  - (3) பரகேசரி அரிஞ்சய சோழர் (956 – 957)
    - (4) இராசகேசரி சுந்தர சோழர் (957 – 970)
      - ஆதித்த கரிகால சோழர்
      - குந்தவையார் I (பெண்)
      - (6) இராசகேசரி இராசராச சோழர் I (985 – 1014)
        - பரகேசரி இராசேந்திர சோழர் I (கங்கைகொண்ட சோழர்) (1012 – 1044)

# ‘கல்கி’யில் வந்த கடிதம்

பொன்னி எனப்படும் காவிரி நதியின் புனலால் செந்நெல் வளம் கொழிக்கும் பாக்கியம் பெற்றது சோழ நாடு. அவ் வளநாட்டிலே “கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றி மூத்தகுடி”யாகவும், படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வரும் பழங் குடியினராகவும் போற்றப்படும் சோழ அரசர்களால் கட்டுவிக்கப்பட்ட பெருங் கோயில்கள் பற்பல.

சிவ பக்தியிற் சிறந்த செம்பியன்மாதேவியார் தன் பக்தியின் சின்னமாக நாகையை அடுத்த ஓர் சிற்றூரை விலைக்கு வாங்கி ஸ்ரீ கைலாச நாதருக்கு ஒரு கோயில் எடுப்பித்து அவ்வூருக்கும், கோயிலுக்கும் செம்பியன் மாதேவி என்ற பெயரைச் சூட்டினர் என்பது தென் இந்திய அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாக்கா வினரின் 1925-26 ஆம் ஆண்டு அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது.

இத் தலம் நாகைக்குத் தென் மேற்கில் சுமார் எட்டு கல் தொலைவில் அமைந்துள்ளது. கீழ்வேளூர் புகை வண்டி நிலையத்திலிருந்து சுமார் ஆறு கல் தொலைவிலும், தேவூர் என்ற பதியிலிருந்து தென் கிழக்கு திசையில் சுமார் மூன்று கல் தொலைவிலும் உள்ளது.



இத் திருக்கோயில் மிக மிகத் தொன்மையான முறையில் காட்சியளிக்கிறது. கோயிலின் இராசகோபுரம் ஓர் அடுக்கு மட்டும் கட்டப்பட்டுப் பூர்த்தி செய்யப் படாத நிலையில் விடுப்பட்டுள்ளது. முதல் பிரகாரத்தில் சுப்பிரமணியர், அம்பிகை கோயில்கள் கிழக்கு முகமாக அமைந்துள்ளன.

இரண்டாவது கோபுரம் மூன்று அடுக்குக் கொண்ட தாய்ப் பூர்த்தி செய்யப் பட்டுள்ளது. கர்ப்பகிரகத்துக் குப் பின்புறமாக கோஷ்டத்தில் மகாவிஷ்ணு உருவம் அமைக்கப் பெற்றுள்ளது. இத்தலத்திற்கருகில் சோழ வித்தியாபுரம் என்ற புகழ் பெற்ற ஊர் அமைந்துள்ளது.

இந்தச் சரித்திரப் பிரசித்திப் பெற்ற கோயிலுக்குப் பற்பல நிவந்தங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. குந்தவையும் முதலாம் இராச ராசனுடைய மனைவியும், செம்பியன்மாதேவியின் திரு நட்சத்திரமாகிய சித்திரை—கேட்டையில் ஸ்ரீ கைலாசநாதருக்கு நிவேதனம் செய்யப் பல நிவந்தங்களை ஏற்படுத்தியுள்ளனர். உத்தம சோழர் ஆட்சியில் அன்னாரது மனைவியாராகிய திரிபுவன மாதேவி யாரால் தன் மாமியார் செம்பியன்மாதேவியின் திரு நட்சத்திரத்தில் ஸ்ரீகைலாசநாதருக்கு நிவேதனம் செய்யப் பல நிவந்தங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

மேலும், ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி பாண்டியர் காலம்வரையில் இக்கோயிலுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிற பல நிவந்தங்கள் பற்றித் தென் இந்தியக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாக்காவினரின் 1925 – 26 ஆம் ஆண்டு அறிக்கையில் 479 – 501 வரை உள்ள 22 கல்

ஜெ3:38·2ப96


வெட்டுகளைப் படி எடுத்துள்ளார்கள். இக் கோயில் செம்பியன்மாதேவியார் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறபடியால் இது கி. பி. 985 ஆம் ஆண்டுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு இராஜ ராஜன் (கி. பி. 985 – 1012) இராஜேந்திரன் முதலியவர்களால் தொடர்ந்து கட்டப் பட்டிருத்தல் வேண்டும். இராஜேந்திரன் காலத்திய கல் வெட்டு ஒன்றில் இடபவாகன தேவருக்கும் செம்பியன் மாதேவி உள்ளிட்ட வேறு சில விக்கிரகங்களுக்கும் நிவேதனத்துக்கு விடப்பட்ட நிலங்களின் வரியை, கிராமப் பெருமக்கள் சபை தள்ளுபடி செய்து விட்ட தாகத் தெரிய வருகிறது.

இதைப் பார்க்க, செம்பியன் மாதேவியாருக்கு உருவச்சிலை இருப்பதாகத் தெரிகிறது. அது இப்பொழுது கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் பக்த முறையில் காட்சியளிக்கும் நல்லம்மை என்ற உருவமாக இருத்தல் வேண்டும்.

கோயிலுக்குச் சொந்தமாகச் சுமார் 250 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அரசர்களால் இறையாக அளிக்கப் பட்ட இறையிலி நிலங்களில் சுமார் நாற்பது ஏக்கர் இறையிலி ஒழிப்புச் சட்டத்தால் பாதிக்கப் பட்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

செம்பியன்மாதேவி,
27—3—64.

**என். கோவிந்தசாமி,**
நிர்வாக அதிகாரி.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111340

17.6.66



சுற்று பிரகாரத்திலுள்ள சப்தமாதா

தாரா அச்சகம், நாகப்பட்டினம்